# உங்களுடைய பிள்ளையுடன் கதைகளைப் பகிரல்

NEWCOMER PARENT RESOURCE SERIES



கதைகளைச் சொல்லல் – அவை உண்மையாக இருந்தாலென்ன அல்லது கற்பனைசெய்யப்பட்டதாக இருந்தாலென்ன - உங்களுடைய பிள்ளையுடன் ஊடாடுவதற்கு அது வேடிக்கையானதொரு வழியாகும்.

உங்களுடைய குடும்ப வாழ்க்கையின் உண்மையான நிகழ்வுகளை ஒருமித்து நீங்கள் நினைவுகொள்ளலாம். ஒவ்வொருவரும் தங்களுக்கு நினைவிருக்கும் வகையில் அந்தக் கதையைத் திருப்பிச் சொல்லி மகிழ்வடைய முடியும். முக்கியமான வாழ்க்கைப் பாடங்களைச் சொல்வதற்கும் சார்புள்ள உணர்வொன்றை உங்களுடைய பிள்ளைக்கு வழங்குவதற்கும் உங்களுடைய சிறுபராயக் கதைகளையும் நீங்கள் பகிர்ந்துகொள்ளலாம் அல்லது உங்களுடைய கலாசாரத்தின் வழிவந்த கதைகளையும் நீங்கள் மீளச் சொல்லலாம்.

கதைசொல்லல் அற்புதமானதாக இருக்கமுடியும். ஆக்கத்திறன் மற்றும் கற்பனைத்திறன் உள்ளவராக உங்களுடைய பிள்ளை இருப்பதற்கும் தன்னைச் சூழவுள்ள உலகத்தினை விளங்கிக்கொள்ளவும் கதைகள் உதவிசெய்கின்றன. பதட்டத்தைக் குறைப்பதற்குக்கூட அவை சிறந்தொரு வழியாக உள்ளன, அத்துடன் உங்களுடைய பிள்ளையின் வாழ்க்கையில் ஏற்படும் மாற்றத்துக்கு அதிகம் சௌகரியத்தை உணர உதவிசெய்கின்றன. முடிவாக, உங்களுடைய வீட்டு மொழியை உங்களுடைய பிள்ளை சிறப்பாக விளங்கிக்கொள்ளவும் பேசவும் உதவிசெய்வதற்கு கதைகள் சக்திவாய்ந்த ஒரு வழியாக உள்ளன- அத்துடன் புதிய மொழிகளைக் கற்றுக்கொள்ளவதற்கும் இது அவர்களுக்கு உதவும்!

## கதைகள் சொல்வதற்கான ஆலோசனைகள்:

- தெளிவான மற்றும் இலகுவான மொழியைப் பயன்படுத்துங்கள்.
- உங்களுடைய பிள்ளை சொல்வதைத் திரும்பக் கூறுங்கள், அப்படியானல் நீங்கள் அதைப் புரிந்துகொள்கிறீர்கள் என்பது உங்களுடைய பிள்ளைக்குத் தெரியும்.
- உங்களுடைய பிள்ளை புதிய சொற்களையும் கருத்துக்களையும் கற்றுக்கொள்வதற்கு உதவிசெய்யுங்கள்.
- பழக்கமான மனிதர்கள், இடங்கள் மற்றும் விடயங்களைப் பற்றிப் பேசுங்கள்.
- உங்களுடைய பிள்ளை புதிய சொற்களையும் கருத்துக்களையும் கற்றுக்கொள்வதற்கு உதவிசெய்யுங்கள்.
- தனிப்பட்ட ரீதியில் அர்த்தமுள்ள விடயங்களைக் கதைப்பதற்குச் சந்தர்ப்பங்கள் வழங்குங்கள்.
- கேள்விகளைக் கேளுங்கள் அத்துடன் பதிலளியுங்கள்.
- உங்களுடைய வீட்டு மொழியை ஒன்றாகச் செவிமடுங்கள் அத்துடன் ஒன்றுசேர்ந்து அதில் கதையுங்கள்.
- உங்களுடைய பிள்ளைக்குப் பிடித்த கதைகளைத் திரும்பத் திரும்பச் சொல்லுங்கள்.
- முடியுமானபோதெல்லாம் உங்களுடைய வீட்டு மொழியில் கதைகள் சொல்வதில் மகிழ்ச்சியடையுங்கள்.

# உங்களுடைய பிள்ளையுடன் கதைகளைப் பகிரல்

NEWCOMER PARENT RESOURCE SERIES

## மொழித் திறன்களை கதை சொல்லல் வளர்க்கின்றது.

குடும்ப நிகழ்வுகள், மரபுகள் மற்றும் உணர்வுகள் பற்றி உங்களுடைய வீட்டு மொழியில் கதைப்பது உங்களுடைய பிள்ளையின் ஆரம்ப விருத்திக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கலாம் என ஆய்வு காட்டுகிறது. உங்களுடைய பிள்ளை பிறந்ததிலிருந்து மூன்று வயதுவரை உள்ள காலமே மொழித்திறன்களை விருத்திசெய்வதற்கு மிகச் சிறந்த நேரம் என்பதும் எங்களுக்குத் தெரியும். இந்த நேரத்தில்தான் மொழித் தொடர்புகளை உருவாக்குவதற்கு மூளை தயாராக இருக்கிறது. இந்த நேரத்தில் எவ்வளவு அதிகமான சொற்களை ஒரு பிள்ளை கேட்கிறாரோ அவ்வளவு அதிகமான சொற்களை அவர் விரைவில் விளங்கி கொள்வார் மற்றும் கற்றுக்கொள்வார். எவ்வளவு அதிகமான சொற்களை அவர்கள் அறிந்திருக்கிறார்களோ, பயன்படுத்துகிறார்களோ, அந்தளவுக்கு சிறந்த வாசகர்களாகின்ற வாய்ப்பு அவர்களுக்கு இருக்கும். எந்த மொழியிலாவது செவிமடுக்கும் மற்றும் கதைக்கும் திறன்களைக் கொண்டிருப்பது பாடசாலைக்குக்குத் தயாராக இருப்பதற்கான அடிப்படைத் திறன் ஆகும்.

## உங்களுடைய வீட்டு மொழியில் கதைகளைச் சொல்லுங்கள்.

இரண்டாம் மொழி ஒன்றைக் கற்றலுக்கான பலமான அத்திவாரமொன்றை, உங்களுடைய வீட்டு மொழியில் கதைத்தல், செவிமடுத்தல், கதைகளைச் சொல்லல் வழங்குகிறது. உங்களுடைய பிள்ளையுடன் தொடர்ந்து உங்களுடைய வீட்டு மொழியைப் பயன்படுத்துங்கள். உங்களுடனும் ஏனைய குடும்பத்தவருடனும் மேலும் தொடர்பாக இருப்பதாக அவர் உணர்வதற்கு அது உதவிசெய்யும். அனேகமாக தங்களுடைய மொழி மற்றும் கலாசாரம் பற்றிய பெருமையுடன் அவர்கள் வளர்வார்கள். உங்களுடைய வீட்டு மொழியில் வலுவான அத்திவாரம் இருப்பது, உங்களுடைய பிள்ளை ஆங்கில மொழி கற்பதை இலகுவாக்கும் என்பது எங்களுக்குத் தெரியும்.

பெற்றோர் மொழிகளைக் கலக்காமலிருப்பதும் வீட்டு மொழியைப் பயன்படுத்துவதை நிறுத்தாமலிருப்பதும் பரிந்துரைக்கப்படுகிறது. உங்களுடைய வீட்டு மொழியைத் தக்கவைக்கவும், பலப்படுத்தவும் தொடர்ந்து அதில் கதையுங்கள், கதைகளைச் சொல்லுங்கள். இரண்டாம் மொழியை விரைவாகவும் சிறப்பாகவும் உங்களுடைய பிள்ளை கற்பதற்கு இது உதவிசெய்யும்.

உங்களுடைய வீட்டு மொழியில் கதைகளைச் சொல்வதும், நேரம் செலவழித்து உங்களுடைய பிள்ளையின் கதைகளைச் செவிமடுப்பதும் அவருக்குப் பலவகைகளில் உதவிசெய்யும்.

- முக்கியமானவராக, செவிமடுக்கப்படுபவராக மற்றும் பெறுமதிமிக்கவராக அவர் உணர்வார்.
- அவருடைய எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் பகிர்ந்து கொள்வதற்கு அவருக்கு ஊக்கமளிக்கப்படுவதால், அவர் உங்களுடன் நெருக்கத்தை உணர்வார்.
- புத்தகங்களில் அதிகம் அக்கறை காட்டுவார்களாக அவர் மாறுவார்.
- உங்களுடைய மொழியில் பல புதிய சொற்களையும் கருத்துக்களையும் அவர் கற்றுக்கொள்ளலாம்.
- உங்களுடன் உங்களுடைய வீட்டு மொழியில் பேசும்படி அவர் ஊக்குவிக்கப்படுகிறார்.
- நிகழ்வுகளை நினைவுகூரவும், கதைகளைச் சொல்லவும், தெரிவுகளைச் செய்யவும், அவர் செய்யும் அனைத்தைப் பற்றியும் பேசவும் உங்களுடைய பிள்ளை கற்றுக்கொள்வார்.
- மீண்டும் மீண்டும் கேட்கும் ஒலிகளைக் கண்டறியவும் சொற்களைச் சுட்டிக்காட்ட ஆரம்பிக்கவும் அவர் கற்றுக்கொள்வார். (இது வாசிக்கக் கற்றுக்கொள்வதற்கான ஆரம்பமாகும்).

## செயல்பாட்டுக்கான யோசனை: உங்களுடைய பிள்ளையுடன் சேர்ந்து கதைப்புத்தகம் ஒன்றை உருவாக்குங்கள்.

- கதைப்புத்தகம் ஒன்றை உருவாக்குவதற்கு, உங்களுடைய பிள்ளையின் சித்திரங்கள் அல்லது படங்களை நீங்கள் பயன்படுத்தலாம்.
- உங்களுடைய பிள்ளை புத்தகமாக உருவாக்க விரும்பும் அவரின் சித்திரங்கள் அல்லது ஒரு குடும்பக் கதை பற்றி அவருடன் கதையுங்கள்.
- அந்தக் கதையில் பயன்படுத்துவதற்கான சொற்களை உங்களுடைய வீட்டு மொழியில் சொல்வதற்கு உங்களுடைய பிள்ளையை ஊக்குவியுங்கள்.
- உங்களுடைய வீட்டு மொழியில் இந்தச் சொற்களை அச்செடுங்கள்.

பன்மொழி பேசும் பெற்றோருக்கான மேலதிக தகவல்களுக்குப் பார்வையிடுங்கள் **cmascanada.ca/cnc/parents**

CMAS
SUPPORTING CHILD CARE IN THE SETTLEMENT COMMUNITY / SOUTIEN DE LA GARDE DES ENFANTS DANS LA COMMUNAUTÉ DE RÈGLEMENT
Funded by: Immigration, Refugees and Citizenship Canada / Financé par : Immigration, Réfugiés et Citoyenneté Canada